முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1100

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.10.2022, திங்கட்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
   அறமாக வாழுகின்ற தேசிகா வாழ்க
   மாறுதலை கலியினில் செய்தே தீருவேன்என
   மாதவ பலம்கூட்டி வந்த அரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி ஆறுமுகப் பெருமான்
   வழங்குவேன் உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 16ம் நாள் 03.10.2022 திங்கட்கிழமை)
   ஊழ்வெல்லும் மகாசக்தி படைத்த
   ஓங்கார ஞானி நீதானப்பா
3. அப்பனே உன்னுள் யானிருந்து
   அகிலத்தை காக்கும் மகாசக்தியாக
   ஒப்புகொண்டு உன்வழி வருபவர்க்கெல்லாம்
   ஓங்கார தீட்சை வழங்கி வர
4. வருகின்ற அரங்கன் தொண்டர்களே
   வையகத்தை காக்கும் ஞானிகளாக மாறுவர்
   தருகின்ற அரங்கன் அருளமுதே
   தரணிக்கே அருமருந்தாக பாதுகாப்பு தரக்கூடும்
5. கூடவே அரங்கனை ஏற்று
   குருவேஎன உலகோர் நாடியே
   அரங்கன் வழி தர்மத்தை
   ஞானம்தரும் சன்மார்க்கத்தையும் ஏற்று
6. ஏற்று உலகோர் இடைவிடா தொடர்ந்து வந்தால்
   இந்தப் பேருலகம் ஆற்றல் மிக்க ஞானஉலகமாக
   ஞானிகள் ஆளும் தர்மலோகமாக மாறி
   ஞான ஆட்சி சடுதி உலகம் காணக்கூடும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–